# ரூஹா சுவாச காற்று

காற்று–14 பிப்ரவரி 2024 சுவாசம்–01
ஆண்டு சந்தா ₹ 200/- தனி இதழ் ₹ 20/-





# இதயம் திறந்து உங்களுடன்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக என்று வாழ்த்துகிறேன். ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார் என்று வாக்குத்தத்தம் செய்த தேவன், உங்களுடைய வாழ்க்கையிலே உங்கள் இருதயம் அதிசயப்பட்டு பூரிக்கத்தக்கதான காரியங்களைச் செய்து வருகிறார் என்று விசுவாசிக்கிறேன்.

## ஜனவரி மாத ஊழியங்கள்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த மாதம் பெங்களூர் திருச்சபையில் ஆராதனை கருத்தரங்களில் கலந்து கொண்டு ஆராதனை வீரர்களுக்கும், சபையில் ஊழியம் செய்கிறவர்களுக்கும் சிறப்பு பயிற்சியும், 19ம் தேதி நடைபெற்ற சிறப்பு உபவாச கூட்டத்தில் காலையும் மாலையும் துதி ஆராதனை ஏறெடுத்து தீர்க்கதரிசன செய்தி அளிக்க கிருபை செய்தார். அன்று 4 வருடங்களாக தீராத சளி வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த ரூபன் என்ற சகோதரருக்கு கர்த்தர் அந்நேரமே பூரண சுகத்தைக்கொடுத்தார்.

ஒவ்வொரு மாதமும் செங்கல்பட்டு மாவட்டத்தில் வைத்து பின்மாரி எழுப்புதல் உபவாச ஜெபம் நடைபெற்று வருகிறது. இந்த வருடத்திற்கான முதல் உபவாச ஜெபம் மிக வல்லமையாக நடைபெற்றது. நம்முடைய தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் ஆசீர்வாதத்திற்காகவும், விக்கிரகத்தின் ஆளுகைகள் கட்டப்படவும் விசேஷமான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. செங்கல்பட்டில் உள்ள அநேக போதகர்களும், விசுவாசிகளும் கலந்து கொண்டு தேசத்திற்காக பாரத்தோடு ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.

மேலும் ஜனவரி 21ம் தேதி அப்போஸ்தலர் விக்டர் ராஜாமணி அவர்களின் கெத்சமனே பூரண சுவிசேஷ சபையில் நடத்தப்பட்ட கூடாரப்பண்டிகையில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டேன். கடைசி கால எழுப்புதலுக்காக 24 மணி நேரமும் ஆராதனையும் ஜெபமும் ஏறெடுக்கப்பட்ட தாவீதின் கூடாரத்தை மீண்டும் தேவன் எழுப்ப விரும்புகிறார் என்ற தீர்க்கதரிசன செய்தியைக் கொடுத்தபோது, அநேக வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையைத் தேவனுக்கு அர்பணித்தனர். தேவ நாமம் மகிமைப்பட்டது

## ரூஹா ஊழியத்தின் 18 ஆம் ஆண்டு நிறைவு விழா

இந்த மாதம் நம் ரூஹா ஊழியத்திற்கு விசேஷமான மாதம். ஆம், ரூஹா ஊழியங்கள் ஆரம்பித்து 18 ஆண்டுகளை நிறைவு செய்ய தேவன் கிருபை செய்திருக்கிறார். தேவனுடைய அளவற்ற இரக்கத்தினாலும், உங்களுடைய பேராதரவினாலும் ஜெபத்தினாலும் இந்த ஊழியம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைப்பண்ணக்கூடும்? என்ற வேத வாக்கியத்தின்படி, ஒருவராலும் அறியப்படாமல் இருந்த ரூஹா ஊழியத்தை, இன்று 13 வகையான ஊழியங்களைச் செய்யவும், தேசங்களுக்கு வெளிச்சமாய் பயன்படுத்தி வருகிறார். ‘‘சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான்’’ (ஏசாயா 60:22) என்ற வார்த்தையின்படி, இந்த 18 வருடங்களில் ஆயிரங்களாய் மாற்றி யிருக்கிறார். இனி வரப்போகிற நாட்களில் பலத்த ஜாதியாய் கர்த்தர் மாற்றவும், வரப்போகிற கடைசிக்கால எழுப்புதலில் இன்னும் வல்லமையாய் பயன்படுத்தவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஒரு முறை நானும் என் குடும்பமும் கடைக்கு சென்றிருந்தோம். அப்பொழுது அங்கே கிறிஸ்தவரல்லாத ஒரு சகோதரி ஓடி வந்து, ‘‘ஐயா, என்னுடைய சகோதரியும் அவள் கணவரும் விபத்தில் மரித்து விட்டார்கள். அவர்களுடைய குழந்தை என்னிடத்தில் வளர்கிறது. அந்த குழந்தைக்காக நான் திருமணம் செய்யாமல் இருக்கிறேன். வயதான பெற்றோர் இருக்கிறார்கள். மனதில் சமாதானமே இல்லை, இதனால் பலமுறை தற்கொலை செய்ய முயற்சித்திருக்கிறேன். கடந்த வருடம் உங்களுடைய காத்திருப்பேன் பாடலை யூடியூப்பில் கேட்க நேரிட்டது. அது என் உள்ளத்தைத் தொட்டது. என் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தேன். இன்றைக்கு கர்த்தர் என்னை சமாதானத்தால் நிறைத்திருக்கிறார். வாரந்தோறும் நீங்கள் தருகிற செய்திகளைக் கேட்டு, ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து

வருகிறேன்'' என்று கூறினார்கள். இதைக்கேட்டு, உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனைத் துதித்தேன்.

தேவன் செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்தவும், விசேஷித்த தீர்க்கதரிசன ஆராதனை மற்றும் வார்த்தையை பெற்றுக்கொள்ளவும் வருகிற பிப்ரவரி 19ம் தேதி புதன் கிழமை வடபழனியில் உள்ள நமது ரூஹா துதி ஜெப மையத்தில் நடைபெறப்போகும் விசேஷித்த ஆண்டுவிழா கொண்டாட்டத்திற்கு வரும்படி உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

## இப்பதான் ஆரம்பமே - புதிய பாடல்

தேவன் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஒரு புதிய ஆரம்பத்தையும், திருப்பு முனைகளையும் வைத்திருக்கிறார். கடந்த நாட்களில் வெட்கம், அவமானங்கள், தோல்விகள், கண்ணீர்கள் இருந்தாலும் தேவன் உனக்கு புதிய ஆரம்பத்தைத் தருகிறார் என்று புதிய நம்பிக்கையைத் தரும் பாடல் இது. இந்த வருடத்திற்கான வாக்குத்தத்தை பாடலாக எழுதி, அதை ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்து, டிசம்பர் 30ம் தேதி வெளியிட தேவன் கிருபை செய்தார். இதுவரை 2 இலட்சத்திற்கும் அதிகமானோர் இப்பாடலைக்கேட்டு ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றனர். நீங்களும் இந்த புதிய பாடலைக்கேட்டு அறிக்கை செய்து, தேவன் தரும் புதிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## தேசத்திற்காக ஜெபியுங்கள்

கடந்த வருடத்தின் இறுதியில் நான் ஜெபித்துக்கொண்டிருந்தபோது, தேவன் என் உள்ளத்தில் நம்முடைய இந்திய தேசத்திற்காக அதிகமாய் ஜெபிக்கவேண்டும் என்ற பாரத்தைக்கொடுத்தார். அன்றைய இரவு அதிகமாக ஜெபிக்கும்போது, தேசத்தின்மேல் அசுத்த ஆவிகள் கட்டவிழ்க்கப்படுவதையும், அதற்கு விரோதமாக யுத்தம் செய்ய தேவன் என்னை உந்தித்தள்ளுவதையும் தரிசனத்தின் பார்த்தேன். அதை நான் புதுவருட ஆராதனையில் ஜனங்கள் மத்தியில் பகிர்ந்து கொண்டு இந்த வருடம் அதிகமாக நம்முடைய இந்திய தேசத்திற்காக அதிகமாக ஜெபிக்க வேண்டும் என்ற அறைகூவல் விடுத்தேன்.

ஆம், தேசத்தின் நடக்கும் அருவருப்புகளினிமித்தம் பெருமூச்சு விடுங்கள் என்று தேவன் எரேமியா தீர்க்கதரிசியிடம் சொல்லுகிறார். வரப்போகிற பாராளுமன்ற தேர்தலுக்காக, ஒவ்வொரு கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட, திருச்சபைகள் கட்டப்பட, அந்தகார கிரியைகள் நிர்மூலமாக, தேசத்தில் பஞ்சம் ஏற்படாதபடிக்கு ஜெபியுங்கள். இது நம்மேல் விழுந்த கடமை. தினமும் 10 நிமிடங்களாவது இந்தியாவின் எழுப்புதலுக்காக ஜெபிக்கும்படி அன்போடு அழைக்கிறேன்.

## அடியேனுக்காகவும் ரூஹா ஊழியங்களுக்காவும் ஜெபியுங்கள்

தேசத்தில் நடக்கும் காரியங்களையெல்லாம் பார்க்கும்போது, கடைசிக்கால எழுப்புதல் சமீபித்துவிட்டதை நன்றாக உணர முடிகிறது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் கடைசி கால எழுப்புதலுக்காக ஆயத்தப்பட வேண்டும். நம்முடைய ஜெபத்தை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். சுவிசேஷம் அறிவிப்பதையும் இன்னும் தீவிரப்படுத்த வேண்டும். ஆகவே இன்றைய காலக்கட்டத்தில் நம் ரூஹா ஊழியத்தில் ஜெபத்தை அதிகப்படுத்தி, ஒவ்வொரு நாளும் இடைவிடாமல் ஊழியங்கள் நடைபெற்று மிகத் தீவிரமாக சுவிசேஷத்தை ரூஹா டிவி மூலமாகவும், நேரடியாகவும் சென்று அறிவித்து வருகிறோம்.

உங்கள் ஜெபத்தினாலும், நீங்கள் தியாகத்தோடு அனுப்புகிற காணிக்கைகளினாலும்தான் தேவ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆகவே உங்களுக்கும் இந்த ஊழியத்தில் பங்குண்டு. இதன் பலனை பரலோகத்திலும், இம்மையிலும நிச்சயம் காண்பீர்கள்.

தினமும் அடியேனுக்காகவும், ரூஹா ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்

**போதகர் ஆல்வின் தாமஸ்**


ruah tv
DECLARE HIS GLORY AMONG THE NATIONS.

ADVT. TARIFF

| | Church | Business |
|---|---|---|
| | *Tariff for 10 Days *Plus 5 Days FREE | *Tariff for 10 Days *Plus 2 Days FREE |
| 30 Sec Duration | ₹. 10,000/- *10 times/Day *100 times | ₹. 15,000/- *10 times/Day *100 times |
| 1 Min. Duration | ₹. 15,000/- *20 times /Day *200 times | ₹. 20,000/- *20 times /Day *200 times |

RUAH TELEVISION NETWORK
AIRTIME SLOT TARIFF

| Duration | Standard Monday-Friday | Premium Sat & Sunday |
|---|---|---|
| 1 Hour Slot | ₹. 2500/- | ₹. 5000/- |
| 30 Min. Slot | ₹. 1500/- | ₹. 3000/- |
| 15 Min. Slot | ₹. 850/- | ₹. 1500/- |

*Free Advertisement of your Church programs and events!
*Repeated Telecast on Weekdays

WE ARE AVAILAIBLE ON
CABLE NETWORKS
SCV CH. NO. 182
TCCL CH. NO. 745
JAK CH. NO. 101
Aristo CH. NO. 612

DIGITAL PLATFORMS
YouTube Roku TV amazon fireTV Jio Fiber Set top box
yupptv TATA PLAY BINGE androidtv airtel xstream

for more information
+91 89396 00777
write us media@ruah.in



# அற்புதங்களையும் அதிசயங்களையும் காண்பீர்கள்!

- போதகர் ஆல்வின் தாமஸ்

ஒரு சாயங்கால பொழுதில் பூங்கா ஒன்றில் பெரியவர்கள் நடைபயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். குருவிகளின் சத்தமும், விளையாடுகிற குழந்தைகளின் சத்தமும் ஒலித்துக்கொண்டிருந்தன. அங்கே ஒரு சிறு பையன், "சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது, அதின் நடுவே இஸ்ரவேலைக் கடந்து போகப்பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது" என்று தனது ஞாயிறு பள்ளி ஆசிரியர் சொல்லிக்கொடுத்த 136ம் சங்கீதத்தில் உள்ள வசனங்களைச் சத்தமாக சொல்லிக்கொண்டிருந்தான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஆராய்ச்சியாளர் ஒருவர், அந்த சிறுவனிடம் சென்று "தம்பி, நீ சொல்லிக்கொண்டிருக்கிற இந்த அதிசயமான காரியங்கள் எல்லாமே வெறும் கதைதான். இஸ்ரவேல் ஜனங்களுக்காக தேவன், செங்கடலை பிளக்கவில்லை, செங்கடலில் ஒரு அடி தண்ணீர் இருந்த பகுதி வழியாக அக்கரைக்கு சென்றார்கள்" என்று சொன்னார். அதற்கு அந்த சிறுவன் மறுமொழியாக, "அந்த ஒரு அடி தண்ணீரிலும் பார்வோனின் சேனைகள் அனைத்தையும் மூழ்கச் செய்த தேவனைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது" என்று துதிக்க ஆரம்பித்தான்.

நானூறு வருடங்கள் அடிமைகளாயிருந்த இஸ்ரவேல் ஜனங்களைத் தேவன், தம்முடைய மகா வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தார். பத்து வாதைகளினால் எகிப்தியர்களை நிலைகுலையச் செய்தார். ஆனாலும் பார்வோனும் அவனுடைய சேனைகளும் இஸ்ரவேல் ஜனங்களை விடாமல் துரத்தினார்கள். முன்பாக செங்கடலும், பின்பாக பார்வோனின் சேனைகளும் சூழ்ந்து கொண்ட சமயத்தில் மிகவும் கலங்கிப்போனார்கள். கொன்றுவிடுவார்களோ என்று அவர்களுடைய ஆத்துமா சோர்ந்துபோன நேரத்தில் கர்த்தர் செங்கடலை இரண்டாக பிரித்து, சமுத்திரத்தின் வழியாக கிட்டத்தட்ட இருபது இலட்சம் ஜனங்களை நடத்திக்கொண்டு போனார். அதுமட்டுமல்லாது அந்த செங்கடலிலேயே இஸ்ரவேல் ஜனங்களைப் பின்தொடர்ந்து வந்த பார்வோனையும் அவன் முழு சேனையையும் ஆழத்திலே மூழ்கடித்தார்.

யோபு பக்தன் தேவனாகிய கர்த்தரை, "**அவர் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிறார்" (யோபு 5:9, 9:10)** என்று வருணிக்கிறார். ஆம், அவர் உங்களுடைய வாழ்க்கையிலும் எண்ணி முடியாத அதிசயங்களையும், உங்கள் மூளை அறிவிற்கு அப்பாற்பட்ட ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் செய்யப்போகிறார். "தேவன் அதிசயங்களைச் செய்கிறார்" என்று சொல்வதை நீங்கள் காதுகளால் மாத்திரம் கேட்டிருக்கக்கூடும். ஆனால் நீங்கள் அனுபவிக்கப்போகிறீர்கள். தேவன் உங்கள் வாழ்க்கையிலும் அதிசயங்களைச் செய்யப்போகிறார்.

தேவ பிள்ளையே, உங்களுக்கு முன்பாகவும் பின்பாகவும் பிரச்சனைகளும் போராட்டங்களும் சூழ்ந்திருக்கிறதா? எந்தப்பக்கம் போவதென்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருக்கிறீர்களா? எதிர்கால வாழ்க்கையைக்குறித்து கலங்கிக்கொண்டிருக்கிறீர்களா? கர்த்தர் உங்களுக்கு அதிசயமான வழியைத் திறந்து, உங்களைப் பிரமிப்படையச் செய்யப்போகிறார். சோர்ந்து போகாதிருங்கள். இந்த தீர்க்கதரிசன செய்தியை முழுவதுமாக விசுவாசத்தோடு வாசியுங்கள்.

## தேவன் அதிசயமானவர்

**நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும் (ஏசாயா 9:6)**

பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனை இந்த உலகத்திற்கு, "அதிசயமானவர்" என்றே நாமத்தையே முதலில் அறிமுகப்படுத்துகிறார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில், ஜனங்கள் மத்தியில் அதிசயங்களைச் செய்தார். குருடருக்கு பார்வை அளித்து, முடவர்களை நடக்கச் செய்து, பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி, பிசாசின்பிடியில் அகப்பட்டவர்களை விடுவித்தார். அதுமட்டுமல்லாது, ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்களைக் கொண்டு ஐயாயிரம் பேருக்கும் மேலாக போஷித்தார். இதனால்

ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தி, ''அதிசயமான காரியங்களை இன்று கண்டோம்'' என்றார்கள். அவர் அதிசயமான செயல்களை செய்கிறவர் மட்டுமல்லாது அவருடைய குணாதிசயமே அதிசயம்.

## உங்கள் பிறப்பு ஒரு அதிசயம்

தேவன் ஒவ்வொருவரையும் அதிசயிக்கத்தக்க விதமாக உருவாக்கியிருக்கிறார். மனித பிறப்பே ஓர் அதிசயம்தான். இதை தாவீது சங்கீதத்தில் குறிப்பிடும்போது, ''**நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள் (சங்கீதம் 139:14)** என்று குறிப்பிடுகிறார். தன்னை தேவன் எவ்வளவு அதிசயமாக உருவாக்கியுள்ளார் என்பதை தாவீது மிகவும் தெளிவாக புரிந்து வைத்திருந்தார்.

என் கருவை உம்முடைய கண்கள் கண்டது. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே, அவைகள் அனைத்தும் உருவேற்படும் நாள்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது (சங்கீதம் 139:15,16) என கூறுகிறார்.

மாணவிகள் மட்டும் படிக்கும் ஒரு பள்ளியில், ஓர் ஆசிரியை, உலக அதிசயங்களைக் கூறுங்கள் என்று ஒரு கேள்வியை கேட்டார். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்த அதிசயங்களையெல்லாம் கூறினர். சிலர், இந்தியாவிலுள்ள தாஜ்மஹால், சீனப் பெருஞ்சுவர், எகிப்து பிரமிடுகள் என சொல்லிக்கொண்டே போனார்கள். ஆனால் ஒரு மாணவி மட்டும், ''டீச்சர், கடவுள் என்னிலே உருவாக்கிய அதிசயங்களை நான் கூற விரும்புகிறேன் என்று சொல்லி, முதலாவது, தொட்டு உணருகிற அதிசயம். என் தாய் என்னை அன்போடு தொடும்போது எனக்கு மிகுந்த சந்தோஷம் ஏற்படுகிறது. அழகான, மென்மையான மலர்களைத் தொடும்போதும் ஏற்படுகிற உணர்வு. இரண்டாவது பெரிய அதிசயம், என் கண்களால் பார்க்கிற அதிசயமாகும். கண்கள் இல்லாமலிருந்தால் கஷ்டப்பட்டிருந்திருப்பேன். மூன்றாவது, என் காதுகள் எல்லாவற்றையும் கூர்மையாய் கேட்கிறதே. அது பெரிய அதிசயம். என்னுடைய மூக்கு முகர்ந்து பழங்களின் வாசனை, மலர்களின் வாசனை எல்லாவற்றையும் அறிந்து கொள்வது ஓர் அதிசயம். அப்படியே சொல்லிக்கொண்டு போனால், கடவுள் எனக்குள் சிருஷ்டித்த அநேக அதிசயங்களைக்கூறலாம் என்று சொன்னாள்.





உலகில் உள்ள 700 கோடி பேருக்கும் தனித்தனியான கைரேகைகள் உள்ளன. ஒவ்வொரு நாளும் 40 முதல் 100 தலைமுடிகள் உதிர்கின்றன. ஆனால் 300 தலைமுடிகள் புதிதாக உருவாகின்றன. உடம்பில் உள்ள 206 எலும்புகளுக்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. கொரோனாவினால் பாதிக்கப்பட்ட ஒரு விசுவாசியை நான் சந்திக்கச் சென்றிருந்தேன். அவர் என்னிடம், ''பாஸ்டர், பத்து நாட்கள் என்னை தீவிர சிகிச்சை பிரிவில் செயற்கையாக ஆக்ஸிஜன் கொடுத்து வைத்திருந்தார்கள். அதற்கு சுமார் 8 இலட்சம் வரை செலவாகிவிட்டது. ஆனால் கடந்த 65 வருடங்களாக எந்த ஒரு கட்டணமும் வாங்காமல், இயற்கையாக நான் சுவாசிக்க ஆக்ஸிஜனை தேவன் கொடுத்தாரே'' என்று சொன்னார்.

ஆம் எனக்கன்பானவர்களே, நாம் ஒவ்வொரு முறையும் மூச்சுக்காற்றை உள்ளே இழுத்து, வெளியே விடுவது தேவனுடைய அதிசயமே. நம்முடைய உள் உறுப்புகளை உண்டாக்கி, தாயின் கருவிலே நமக்கு உரு தந்தது தேவனுடைய அதிசயமான கிரியைகளே.. தேவன் மற்ற சிருஷ்டிகளைத் தம்முடைய வார்த்தையினால் உருவாக்கினார். ஆனால் மனிதனை படைக்கும்போது, களிமண்ணை எடுத்து பிசைந்து அதற்கு ஒரு வடிவம் கொடுத்து, தம்முடைய சாயலாக உருவாக்கினார்.

அதிசய படைப்பாகிய நீங்கள் வியாதியோடு வாழ வேண்டிய அவசியம் இல்லை. எப்பேர்ப்பட்ட வியாதி உங்களுக்கு இருந்தாலும் தேவன் அதை சுகமாக்க வல்லவராயிருக்கிறார். மரித்து அடக்கம் பண்ணப்பட்ட லாசருவையே தேவன் நான்கு நாட்கள் கழித்து உயிரோடு எழுப்பினார் என்றால், உங்களுடைய நோய்கள் அவருக்கு எம்மாத்திரம். உங்களை குணமாக்குவது தேவனுக்கு இலேசான காரியம்.

கடந்த 2019ம் வருடம் குஜராத் மாநிலம் வியாரா என்ற பட்டணத்திற்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் சுவிசேஷ கூட்டத்தில் தேவனுடைய வார்த்தையைக் கொடுப்பதற்காக அழைக்கப்பட்டிருந்தேன். மூன்று நாட்கள் நடைபெற்ற அந்தக்கூட்டத்தில் சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமான ஜனங்கள் ஒவ்வொருநாளும் கலந்து கொண்டார்கள். மூன்றாவது நாளில் தேவனுடைய சுகமளிக்கிற வல்லமையைக் குறித்து நான் பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு வயதான தாயாரை சாக்கு துணியில் தூக்கிக்கொண்டு வந்தார்கள். அந்த வயதான தாயார் ஒரு ஆசிரியை. அவர்களுக்கு பணி உயர்வு கிடைக்கக்கூடாது என்று அவர்களுக்கு விரோதமாக பில்லி சூனியம் செய்திருந்தார்கள். அந்த தாயாரால் உட்காரவோ, எழும்பவோ முடியாது. முதுகு தண்டில் பெலனே கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவரைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். அவர்களைப் பார்க்கும்போது நான் மிகவும் கலங்கிப்போனேன்.

பின்பு ஆவியில் வைராக்கியம் கொண்டு, ஒருவராய் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரே என்று அதிகாரத்தோடும் வல்லமையோடும் ஜெபிக்க ஆரம்பித்தேன். கர்த்தர், அந்த தாயாரின் கட்டுகளை உடைத்து, அவர்களை எழுந்து நடக்கவும் உட்காரவும், எனது அருகில் அமர்ந்து பேசவும் அதிசயம் செய்தார்.

சுகத்திற்காக தேவனிடத்தில் விண்ணப்பங்களை ஏறெடுத்துக் கொண்டிருக்கிற என் அன்பு சகோதர சகோதரிகளே, கர்த்தர் உங்களுக்கு பரிபூரண சுகத்தைத் தருவார். கடைசி நிலையில் உள்ள புற்றுநோயையும் தேவன் குணமாக்க வல்லவராயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தை அனுப்பி உங்களை குணமாக்குவார். நீரழிவு நோயினால் கஷ்டப்படுகிற உங்களுக்கு

கர்த்தர் உள் உறுப்புகள் ஒவ்வொன்றையும் பெலப்படுத்துவார். நீங்கள் சாகாமல் பிழைத்திருந்து கர்த்தருடைய செய்கையை விவரிப்பீர்கள்.

குழந்தை செல்வத்திற்காக ஏங்கிக்கொண்டிருக்கிற உங்களுக்கு கர்த்தர் அதிசயங்களைக் காணச் செய்வார். அன்னாளை கடாட்சித்து அவள் வாழ்க்கையில் அதிசயத்தை செய்த சேனைகளின் தேவனாகிய கர்த்தர், உங்கள் வாழ்க்கையிலும் செய்வது அதிக நிச்சயம்.


## கர்த்தருடைய வார்த்தை அதிசயம்

**உம்முடைய சாட்சிகள் அதிசயமானவைகள். ஆகையால் என் ஆத்துமா அவைகளைக் கைக்கொள்ளும். (சங்கீதம் 119:129)**

ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை அதிசயமானது. இந்த அதிசயமான வார்த்தையை தேவன் தம்முடைய சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் முக்கியப்படுத்தி வைத்திருக்கிறார். இந்த வார்த்தையைக்கொண்டுதான் தேவன் உலகங்களைச் சிருஷ்டித்தார். இந்த வார்த்தை எவ்வளவு அதிசயமானது என்பதற்கு ஒரு உதாரணத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். நாம் இருக்கிற இந்த பூமியானது பால்வழி அண்டத்தில் உள்ளது. இந்த பால்வழி அண்டத்திற்குள்ளே சூரியன், சந்திரன் மற்றும் ஏராளமான கோள்கள் உள்ளன. சமீபத்தில் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து, இந்த பால்வழி அண்டத்தைப்போல 2 ட்ரில்லியன் அதாவது இரண்டு இலட்சம் கோடி பால்வழி அண்டம் உள்ளதாக கூறுகின்றனர். அப்படியென்றால் இந்த இரண்டு இலட்சம் கோடி பால்வழி அண்டத்தையும் உருவாக்கியது கர்த்தருடைய வார்த்தையே..

இந்த உலகத்திலே மிக வேகமாக செல்லக்கூடியது ஒளி. ஒரு வினாடியில் மூன்று இலட்சம் கிலோமீட்டர் வேகத்தில் செல்லும். ஆனால் தேவனுடைய வார்த்தை இதை விட வேகமாகச் செல்லும். **"கர்த்தர் தமது வார்த்தையை பூமியிலே அனுப்புகிறார், அவருடைய சொல் மகா தீவிரமாய் செல்லுகிறது" (சங்கீதம் 147:15)** எரேமியா தீர்க்கதரிசியிடம், என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் (எரேமியா 1:12) என்று சொல்லுகிறார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, கப்பர்நகூம் என்ற இடத்திற்கு வந்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் இயேசுவிடம் வந்து, தன்னுடைய வேலைக்காரன் சுகமாக வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். அதற்கு இயேசுகிறிஸ்து, நான் உன் வீட்டிற்கு வந்து அவனை சுகமாக்குகிறேன் என்று சொன்னபோது, அந்த நூற்றுக்கு அதிபதி, நீர் என்னுடைய வீட்டிற்கு வருவதற்கு நான் பாத்திரன் அல்ல, நீர் "ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்று சொன்னான். இயேசு நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார்.



"அந்த நாழிகையிலே வேலைக்காரன் சொஸ்தமானான்" என்று வேதாகமம் பதிவு செய்கிறது. இயேசு, ஆகக்கடவது என்ற வார்த்தையை சொல்லி முடிக்கும் முன்பாகவே வேலைக்காரன் சுகமாகி விட்டான். ஆம், தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தை மிகத்தீவிரமாக சென்று அது தான் அனுப்பிய காரியங்களைச் செய்து முடிக்கும். உங்களுடைய வாழ்க்கையின் பிரச்சனைகளுக்கு நேராக தேவன் தமது வார்த்தையை அனுப்புகிறார். அந்த வார்த்தை உங்கள் சூழ்நிலைகளைத் தலைகீழாக மாற்றும். தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது. ஆகவே அது உங்களுடைய ஆத்துமாவையும், சரீரத்தையும் உயிர்ப்பிக்கும். உங்களுக்கு விடுதலையைத் தரும். தேவன் உங்களுக்கு கொடுக்கிற ஒவ்வொரு வார்த்தையையும் பிடித்துக்கொள்ளுங்கள். அந்த வார்த்தை உங்களை வாழ வைக்கும்.

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது, கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7)**

அன்பான வாலிப பிள்ளைகளே, ஞானத்தில் குறைவுள்ளவர்களா யிருக்கிறீர்களா? படிப்பில் தோல்வி அடைந்திருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள். தேவனுடைய அதிசயமான வார்த்தை உங்களை ஞானிகளாக மாற்றும். இந்த அதிசயமான வார்த்தையை நீங்கள் ஒவ்வொரு நாளும் வாசியுங்கள். அதிகாலையில் எழுந்து, உங்கள் பாடங்களைப் படிப்பதற்கு முன்பாக, செல்போனை பார்ப்பதற்கு முன்பாக கர்த்தருடைய வார்த்தையை வாசியுங்கள். ஒரு வசனத்தை எடுத்து அதை தியானியுங்கள். அந்த வசனத்தை நாள்முழுதும் அறிக்கை செய்து கொண்டே இருங்கள். நீங்கள் எந்த அளவிற்கு கர்த்தருடைய வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களோ, அந்த அளவிற்கு கர்த்தர் உங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உங்களை உயர்த்துவார்.

உங்களுக்கு எதிராக வருகிற பாவ சோதனைகளையெல்லாம் கர்த்தருடைய வார்த்தையின் மூலமாகத்தான் ஜெயிக்க முடியும். வேத வசனமாகிய ஆவியின் பட்டயம் என்ற யுத்தக்கருவியை நீங்கள் எப்பொழுதும் வைத்திருப்பது அவசியம். பிசாசானவன் எப்பொழுது உங்களை விழுங்கலாமோவென்று நினைக்கும்பொழுது, உங்களுடைய பரிசுத்தமான வாழ்க்கைக்கு களங்கம் விளைவிக்க செயல்படும்போது, இந்த வார்த்தையாகிய பட்டயத்தை எடுத்து அவனை வெட்டி வீழ்த்த வேண்டும். அதற்கு உங்களுக்கு வார்த்தை தெரிந்திருக்க வேண்டும்.

இந்த வேதாகமம் உங்கள் கையில் இருப்பதற்கு எத்தனையோ பரிசுத்தவான்கள் மிகுந்த உபத்திரவங்களையும், போராட்டங்களையும் அனுபவித்திருக்கிறார்கள். சிலர் இரத்த சாட்சியாகவும் மரித்திருக்கிறார்கள். ஆகவே அதிசயங்கள் நிறைந்த தேவனுடைய வார்த்தையை தினமும் படிப்பதற்கும் தியானிப்பதற்கும், மற்றவர்களுக்கு சொல்வதற்கும் தீர்மானம் எடுங்கள். கர்த்தர் உங்களை அதிசயமாய் கனப்படுத்துவார்.

**கர்த்தருடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை (சங்கீதம் 119:116)**

## கர்த்தருடைய அழைப்பு அதிசயம்

**நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய**

**புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்த ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேதுரு 2:9)**

தேவன் உங்களையும் என்னையும் ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்திருக்கிறார். ஆங்கிலத்தில் Marvellous Light என்று போடப்பட்டிருக்கிறது. முன்னே, பாவம் என்ற அந்தகாரத்தின் இருளில் இருந்த நம்மை பிரகாசமுள்ள வெளிச்சமாகிய இயேசுவினிடத்திற்கு தேவன் நம்மை அதிசயமாய் அழைத்திருக்கிறார். எத்தனையோ மனிதர்கள் இந்த உலகத்தில் இருக்கும்போது, தேவன் தாயின் கருவில் இருக்கும்போதே என்னைத் தெரிந்து கொண்டு, தூரம் போன என்னை அழைத்துக்கொண்டுவந்து அவருடைய வேலையைச் செய்ய என்னை பயன்படுத்தி வருகிறாரே என்று நான் அடிக்கடி நினைத்து, தேவனுக்கு நன்றி சொல்லுவேன்.

கர்த்தர் ஒருவனை அழைக்கிறார் என்றால், அது சாதாரணமான அழைப்பு அல்ல. அது சாதாரணமான தெரிந்து கொள்ளுதலும் அல்ல. உங்கள் மீது தமது பரலோகத்தின் திட்டங்களைச் செயல்படுத்தும்படி அழைக்கிறார். நீங்கள் தேவ சமூகத்தை விட்டு, விலகி ஓடினாலும் அந்த அழைப்பு உங்களைப் பின்தொடர்ந்தே வரும். ஆகவே தாவீது, நான் பாதாளத்தில் படுக்கைப்போட்டாலும் அங்கே உமது கரம் என்னை பிடிக்கும் என்று சொல்லுகிறார். தேவனுடைய அழைப்பை மறந்து, வழியை மாற்றி, தர்ஷீசுக்கு ஓடிக்கொண்டிருந்த யோனாவை நடுக்கடலிலே சந்தித்து, நினிவேக்கு நேராக வரச் செய்தார். அங்கே யோனா மூலமாக பெரிய மனந்திரும்புதல், எழுப்புதல் உண்டானது. பிறக்கிற எல்லா ஆண்குழந்தைகளையும் நைல் நதியில் வீசி கொலைசெய்ய வேண்டும் என்று பார்வோனால் கட்டளைபிறப்பிக்கப்பட்டாலும் தேவன், மோசேயை பாதுகாத்து, எகிப்தின் அரண்மனையில் வளர்த்து, இஸ்ரவேலை கானானுக்கு நேராக நடத்திச் செல்லும் இரட்சகனாக ஏற்படுத்தினார். பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தர வெளியிலும் தேவனாகிய கர்த்தர் முற்பிதாவாகிய யாக்கோபை அழைத்து, கண்டுபிடித்து, நடத்தி, அவனைத் தமது கண்மணியைப் போல காத்தார். கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார். வெறும் கோலும் கையுமாக போன யாக்கோபை இரண்டு பரிவாரங்களோடு வரச் செய்தார். மீன்பிடிக்கிற பேதுருவை அழைத்து, திருச்சபைக்கு அப்போஸ்தலராக ஏற்படுத்தி, பேதுருவின் நிழல்பட்டு வியாதியஸ்தர்கள் சுகமானார்கள். இதேபோல தேவன் ஒவ்வொரு பரிசுத்தவான்களையும் அதிசயமாய் அழைத்திருக்கிறார்.

கர்த்தர் உங்களையும் நயங்காட்டி அழைத்திருக்கிறார். தேவன் அழைத்த அழைப்பிற்கு நீங்கள் பாத்திரவான்களாய் நடந்து கொள்கிறீர்களா? வரப்போகிற மாபெரும் கடைசிகால எழுப்புதலில் உங்கள் பங்கு என்ன? வேடிக்கைப்பார்த்து, தேவன் செய்யப்போகிற மகத்தான காரியங்களைக் கண்டு கைத்தட்டி பூரிப்படையப்போகிறீர்களா? அல்லது அந்த எழுப்புதலில் பங்கு வகிக்கப்போகிறீர்களா? கர்த்தர் எதற்காக உங்களை அழைத்திருக்கிறார் என்பதை சிந்தித்து, அழைப்பின் பாதையில் செல்லுங்கள்.

தேவனுடைய அன்பையும் சுவிசேஷத்தையும் உங்களுடன் பணியாற்றுகிறவர்களுக்கும், படிக்கிறவர்களுக்கும் அறிவியுங்கள். உங்களுடைய நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக உத்திரவாதம் எடுத்து ஜெபியுங்கள். தேவனுடைய அதிசயமான அழைப்பை உதாசீனப்படுத்தாமல் இன்றே தேவனிடம் சரணடையுங்கள். நிச்சயமாக நீங்கள் இப்பொழுது இருக்கிற நிலைமையைப் பார்க்கிலும் உங்களை ஆயிரமடங்கு ஆசீர்வதிக்க தேவன் வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

## தேவன் செய்த அதிசயங்களை மறவாதீர்கள்

**தேவனுடைய செயல்களையும், அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள், அவர்கள் திரும்பி தேவனைப் பரீட்சை பார்த்து, இஸ்ரவேலின் பரித்தரை மட்டுப்படுத்தினார்கள். அருடைய கரத்தையும், தங்களைச் சத்துருவுக்கு விலக்கி மீட்ட நாளையும் நினையாமற்போனார்கள். (சங்கீதம் 78:11)**

இஸ்ரவேல் ஜனங்கள், தூதர்களின் அப்பமாகிய மன்னாவை சாப்பிட்டார்கள். தேவன் அவர்களுக்காக கன்மலையை பிளந்து தண்ணீரைக் குடிக்கக் கொடுத்தார். வனாந்திரத்திலே காடைகளால் போஷித்தார். ஒரு வியாதியும் அணுக விடாமல் பரிகாரியாய் கூடவே இருந்தார். சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்டார். அவர்களுடைய காலணிகள் தேய்ந்து போகாதபடி காத்தார். பகலிலே மேக ஸ்தம்பத்தினாலும் இரவிலே அக்கினி ஸ்தம்பத்தினாலும் வழிடத்தினார். ஒவ்வொரு நாளும் ஏராளமான அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்தாலும், அவர்கள் தேவனையும், அவர் செய்த அதிசயங்களையும் மறந்து, தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அவருடைய வல்லமையை மட்டுப்படுத்தினார்கள். தங்களுக்கென்று விக்கிரகங்களை உண்டுபண்ணினார்கள். ஆகையால் எகிப்திலிருந்து புறப்பட்டவர்களில் யோசுவாவும் காலேப்பும் தவிர மற்ற ஒருவரும் கானான் தேசத்திற்குள் போகவில்லை..

வாழ்க்கையில் பிரச்சனைகளும் போராட்டங்களும் ஏற்படும்போது கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்காதீர்கள். தேவன் உங்களை நடத்தி வந்த அதிசயமான காரியங்களை நினைத்து நன்றி சொல்லுங்கள். ''கடந்த நாட்களில் என் வாழ்க்கையில் அதிசயங்களைச் செய்தீரே இப்பொழுதும் செய்வீர்'' என்று விசுவாச அறிக்கையிடுங்கள்.

கர்த்தர் உங்களுக்குச் செய்த சிறிய நன்மையோ, அல்லது பெரிய நன்மையோ எதுவாயிருந்தாலும் உங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ''**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே (சங்கீதம் 103:1,2)** என்றுச்சொல்லி, அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். அப்படி நீங்கள் ஒவ்வொன்றுக்கும் நன்றி சொல்ல சொல்ல அவர் உங்கள்மேல் பிரியமாயிருந்து உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பார்.

**என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தம் செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது. ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லி முடியாது. நான் அவைகளைச் சொல்லி அறிவிக்க வேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானாவைகள். (சங்கீதம் 40:5)**

சங்கீதக்காரனாகிய தாவீது சொன்னதுபோல, எண்ணிக்கைக்கு அடங்காத அதிசயங்களை தேவன் உங்கள் வாழ்க்கையில் செய்வார். அவர் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிறார். விவரிக்கப்பட்டாலும் நம்பக்கூடாத ஆச்சரியமான காரியங்களை உங்கள் வாழ்க்கையில் நடப்பிப்பார். உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன் என்று வாக்குப்பண்ணின தேவன், அதிசயமாய் மற்றவர்கள் ஆச்சரியப்படும் வகையில் உங்களை நடத்துவார்.

சாட்சி பகுதி

# நன்மை செய்தவரை துதியுங்கள்!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து வருகிறார். (யோபு 9:10) நமது ரூஹா ஊழியத்தின் மூலமாக நடைபெறுகிற கூட்டங்களில் தேவன் ஜனங்களுக்கு பூரண சுகத்தையும் விடுதலையையும் கொடுத்து ஆசீர்வதிக்கிறார். தேவனுடைய நாமத்தின் மகிமைக்காகவும், உங்களுடைய விசுவாசத்தின் வளர்ச்சிக்காகவும் அற்புத சுகத்தைப் பெற்றுக்கொண்டவர்களின் சாட்சிகள்:

## 1 ஜீவனைக் காப்பாற்றி மறுவாழ்வு தந்தார்



என்னுடைய பெயர் **சக்தி ஸ்டீபன்.** நானும் என் குடும்பமும் கடந்த ஒரு வருடமாக ரூஹா திருச்சபைக்கு வந்து கொண்டிருக்கிறோம். கடந்த நவம்பர் மாதம் கிறிஸ்மஸ்க்காக என்னுடைய வீட்டை அழகுப்படுத்த பெயிண்ட் அடித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்கு தண்ணீர் தாகம் எடுத்தது. ஆகவே என் மகனிடம் தண்ணீர் கேட்டேன். அவன் தண்ணீர் பாட்டிலைக் கொண்டு வந்து தின்னர் பாட்டில் அருகில் வைத்துவிட்டான். நான் தண்ணீர் என்று தெரியாமல் தின்னரை குடித்துவிட்டேன். உடனே என்னை மருத்துவமனைக்கு கொண்டு சென்று, சிகிச்சை அளித்தார்கள். ரூஹா திருச்சபையின் நேரலையை பார்த்து ஜெபித்துக்கொண்டே இருந்தேன். மறுநாள் டிசம்பர் 1ம் தேதி வாக்குத்தத்த ஆராதனைக்கு வந்து போதகரிடம் ஜெபித்தபோது, "உங்களுக்கு விரோதமாக எழும்புகிற ஆயுதங்களை கர்த்தர் நிர்மூலமாக்குகிறார், உங்கள் ஜீவனைப் பாதுகாக்கிறார்" என்று ஜெபித்தார்கள். மறுநாள் காலையில் ரிப்போர்ட் வாங்கும்போது எல்லாமே நார்மலாக இருந்தது. ஒவ்வொரு வருடமும் எங்கள் குடும்பத்தில் நவம்பர் டிசம்பர் மாதத்தில் ஏதாவது பெரிய பிரச்சனையோ அல்லது மரணமோ ஏற்படும். கடந்த நவம்பர் மாதம் தின்னர் குடித்து என்னுடைய உறவினர் இறந்துவிட்டார். ஆனால் எங்கள் குடும்பத்தில் உள்ள சாபத்தை உடைத்து, என் ஜீவனைக்காப்பாற்றிய தேவனுக்கு நன்றி

## 2 நினைத்து பார்க்காத வேலை கிடைத்தது



என்னுடைய பெயர் **திக்ஷித்தா**. நான் சென்னை மணப்பாக்கத்தில் வசிக்கிறேன். நான் புதிய வேலைக்காக வெகு நாட்களாக காத்திருந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். பல நிறுவனங்களில் வேலைக்கான Requirement உள்ளதா என்று தேடினேன். அநேக கம்பெனியில் வேலை இல்லை என்று கூறி என்னை அனுப்பிவிட்டார்கள். மிகவும் மனம் சோர்ந்து போனேன். இந்நிலையில் போதகர் ஆல்வின் தாமஸ் அவர்களிடம் என் நிலைமையைக்கூறி, எனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். போதகர் ஜெபித்து, **"சீக்கிரத்திலே நீ நினைத்து பார்க்காத புதிய வேலையைக் கொடுக்கப் போகிறார்" என்று தீர்க்கதரிசனம் சொன்னார்கள். மறுநாளிலே சிங்கப்பூர் தேசத்தை சார்ந்த நிறுவனத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது.** உங்களுடைய தகுதிக்கு ஏற்ப ஒரு வேலை காலியாக இருக்கிறது. சம்பளத்தோடு 6 மாத பயிற்சி வழங்குகிறோம் என்று கூறினார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

## 3 ஆச்சரியமாக தேவைகளை சந்தித்தார்



என்னுடைய பெயர் **மேரி லீலா.** நான் பெங்களூர் பட்டணத்தில் வசிக்கிறேன். நாங்கள் ஒரு வியாபாரம் செய்து கொண்டு வருகிறோம். ஒவ்வொரு மாதமும் 10ம் தேதிக்குள் வேலை பார்க்கிறவர்களுக்கு சம்பளம் போட வேண்டும். இந்த மாதம் என்ன செய்வதென்று யோசித்துக்கொண்டிருந்த நேரம் கடந்த நவம்பர் மாதம் 7ம் தேதி இரவு 12 மணிக்கு ரூஹா டிவியில் ஒளிபரப்பப்பட்ட 30 நாட்கள் உபவாச ஜெபத்தை யூடியூப் மூலமாக பார்த்துக்கொண்டிருந்தேன். அந்நிகழ்ச்சியின் கடைசியில் காணிக்கை வேளையில் கர்த்தர் ஒரு அற்புதத்தை செய்ய வேண்டும் என்று 2000 ரூபாயை பொருத்தனையாக விதைத்தேன். மறுநாள் காலையிலே அநேக நாட்களாக வராமல் இருந்த பணம் வங்கியில் டெப்பாசிட் செய்யப்பட்டிருந்தது. என் பொருத்தனையைக் கனம்பண்ணி அற்புதம்செய்த தேவனுக்கு நன்றி.

## 4 இழந்த ஆசீர்வாதத்தைத் திரும்ப கொடுத்தார்



என் பெயர் **ஜெனிபர்.** என் கணவர் கிதியோன். அவர் நைஜீரியாவில் வேலை பார்த்து வந்தார். பின்பு இந்தியாவிற்கு வந்துவிட்டார். சென்னையில் அவருக்கு வேலைகிடைக்காததினிமித்தம் மிகவும் மனசோர்வு உள்ளாகி, தேவனை மறுதலிக்க ஆரம்பித்தார். 2021ல் திடீரென்று இருதயவலி வந்ததினால் நாங்கள் மருத்துவமனையில் அவரை அனுமதித்தோம். மரணபடுக்கையில் இருந்தார். அந்நேரத்தில் டிவியில் போதகர் ஆல்வின்தாமஸ் அவர்களின் நன்றி பாடலானது ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது. அதைத்தொடர்ந்து இன்றைய ரேமா வார்த்தை வந்த அந்த தீர்க்கதரிசன வார்த்தை அவருடைய உள்ளத்திற்குள் விசுவாசத்தை விதைத்தது. அதன்பிறகு மூலமாக போதகர் எங்களுக்காக ஜெபித்துக்கொண்டிருக்கும்போது, 4 வருடமாக தேவனை மறுதலித்த என் கணவர் ஆவியில் நிரம்பி அந்நிய பாஷைகளை பேச ஆரம்பித்தார். "சகோதரி கர்த்தர் உங்களை விதவையாக்க விடமாட்டார், உங்கள் கணவருக்கு ஜீவனைக்கொடுப்பார்" என்று தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். இறந்துவிடுவார் என்று நிலையில் இருந்த என் கணவர் ஜெபத்திற்கு பின்பாக ஒரே மாதத்தில் அவருடைய உடலில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. மறுபடியுமாக வேலைக்கு முயற்சி செய்தபோது, நல்ல வேலைகிடைத்து மீண்டும் நைஜீரியாவுக்கு போக தேவன் கிருபை செய்தார். எங்கள் கடன்களையெல்லாம் சீக்கிரம் அடைக்க கிருபை செய்தார். எங்கள் வாழ்க்கையில் அற்புதத்தை செய்த தேவனுக்கு கோடி நன்றிகள்!

## 5 வெளி நாட்டில் வேலை கிடைத்தது



என்னுடைய பெயர் **ஞான சௌந்தரியா.** என்னுடைய மகனுக்கு வேலை கிடைக்காததின் நிமித்தமாக மனஅழுத்திற்கு ஆளாகிவிட்டான். Supernatural திருப்புமுனை கூட்டத்தின் இறுதி நாளிலே நடந்த ஏழு மணி நேர இடைவிடா துதி மற்றும் ஆராதனையிலே கலந்துக் கொண்டு ஜெபித்தோம். அப்போது கூட்டத்தின் முடிவிலே போதகர் அவர்கள், வீட்டிற்கு செல்வதற்குள்ளாக நற்செய்தியை கேட்பீர்கள் என்று கூறி யிருந்தார்கள். அதை போலவே, வீட்டிற்கு போவதற்குள்ளாகவே துபாய் தேசத்திலே வேலை ஆயத்தமாய் இருக்கிறதென்றும், துபாய் செல்லுவதற்குரிய விமான பயணச்சீட்டை வந்திருக்கிறது என்று போன் மூலமாக அழைத்து கூறினர். இப்போது என்னுடைய மகன் துபாய் தேசத்திலே பணிபுரிந்து வருகிறான். கர்த்தருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக!

## 6 கட்டி மறைந்தது



என்னுடைய பெயர் **பிரின்ஸ் சகாயராஜ்.** என்னுடைய கழுத்து பகுதியிலே கட்டி ஒன்று இருந்தது. இது கேன்சர் கட்டியாக இருக்குமோ என்று பயந்து கொண்டிருந்தேன். அப்பொழுது ரூஹா திருச்சபையில் நடந்த சுகமளிக்கும் ஆராதனையில் போதகர் எனக்காக ஜெபித்தார்கள். நானும் கட்டி மறைந்து போக வேண்டுமென்று என்று ஜெபித்தேன். அதைபோலவே நான் மருத்துவ பரிசோதனைக்காக சென்றபோது ஆராய்ந்த மருத்துவர்கள், இது சாதாரண கட்டிதான் மருந்துகளின் மூலமாகவே குணப்படுத்தி விடலாம் என்று கூறினார்கள். இப்போது கழுத்திலே கட்டி இல்லை. கட்டியை சுகமாக்கிய கர்த்தருக்குக் கோடான கோடி நன்றி!


### தேவன் தரும் அற்புதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

**இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதாவர்!!**

வியாதியினால் கஷ்டப்படுகிறீர்களா? கடன் தொல்லையா? குடும்பத்தில் சமாதானம் இல்லையா? அற்புதத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். இன்றும் உங்களுக்கு அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வார். உங்களுடைய ஜெப விண்ணப்பங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்:
**044 61328777, 9884901777**
(WHATSAPP)

மின்னஞ்சல் முகவரி:
**prayer.ruah@gmail.com**

Youth Special

# Target முக்கியங்க!

Ps. Cherie Mitchelle



**Hi** நண்பர்களே! உங்கள் **Cherie**யின் அன்பான வாழ்த்துக்கள். எல்லாரும் எப்படி இருக்கீங்க? புதிய வருஷம் புதிய சிந்தனைகளா? இல்ல பழைய காரியங்களோடேவே **Continue** பண்ணிட்டு இருக்கீங்களா? உங்க பழைய வருஷத்தோட எல்லா கஷ்டங்களையும் மூட்டக்கட்டி வைச்சிடுங்க. இல்லனா தூரமா தூக்கி எரிஞ்சிடுங்க. இனிமே அதெல்லாம் உங்களுக்கு தேவைப்படாது. எப்படி போச்சு உங்களுடைய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள்? நல்லா **Enjoy** பண்ணி இருந்திருப்பீங்கனு நம்புறேன். என்னோட கொண்டாட்டங்கள் ரொம்பவே நல்லா போச்சுனுதான் சொல்லனும். கர்த்தருடைய பிரசன்னத்துல கிறிஸ்துமசும், வாக்குத்தத்தங்களோடே புத்தாண்டுக்குள்ள பிரவேசித்ததுதான் **Best Moment**னு சொல்லியே ஆகனும்.

இந்த வருஷம் இலக்குகளை அடைகிற வருஷமாக இருக்குதுங்க. நம்ம ஸ்டைலில் சொல்லனும்னா **Target**களை ரீச் பண்ணுகிற வருடம்தான் இது. இந்த செய்தி எனக்கு ரொம்ப ஸ்பெஷல்ங்க. ஆமாங்க! **Target** முக்கியங்க! எளிதில அடைய முடிகிறது இலக்கு இல்ல. நம்மள அடுத்தகட்டத்துக்கு கொண்டுபோகிறது தான் உண்மையான இலக்கு. கடந்த வருஷத்தோட இலக்குகளை விட இந்த வருஷத்துல உங்கள் இலக்குகள் பெரிதாக இருக்கனும். எத்தன பேர் நம்புறீங்க உங்க எல் லாருக்கும் ஒரு அழைப்பை இயேசப்பா வெச்சியிருக்காருனு? அழைப்புனு ஒன்னு இருந்தா கண்டிப்பா இலக்குனு ஒன்னு இருக்கும். நம்ம எல்லாருமே சில பிரத்தியேக இலக்குகளை அடைய தான் முயற்சிக்கிறோம்,. ஆனா அதற்கு இலக்குகளை குறித்த சில காரியங்களை நாம தெரிஞ்சிக்கனும்

## Target-னாலே Circle தான்:

காலம் என்பது ஒரு வட்டம் போல தான்.. கடிகாரமும், வாரநாட்களையும் பாத்தீங்கனா அதுவும் கூட ஒரு சக்கரத்தை போல தான் இருக்கும். அது போல இலக்கு என்றாலே ஒரு வட்டம் போன்று தான் இருக்கும். ஒரு கேமரால ஒரு குறிப்பிட்ட நபரையோ பொருளையோ அதற்கு அத focus பண்றது அவசியம். அந்த focusம் வட்டம் போல தான் இருக்கும். நம்ம கருவிழிக்கூட வட்டமாகத்தான் இருக்கும். நம்ம இலக்கை அடைய எடுக்குற முயற்சிகள் எல்லாமே அந்த வட்டத்திற்குள் தான் வந்து சேரும். நீங்க எத அடையனும் நினைக்குறீங்களோ அத இந்த வட்டத்திற்குள் கொண்டு வந்து தொடர்ந்து ஓடணும். **இலக்கை அடையானும்னா ஓடணும்ங்க.**



நீங்க தடகள வீரராக (**Athlete**) இல்லாம இருக்கலாம்.ஆனா உங்களுடைய இலக்குகளை அடைய நீங்க ஓடியே ஆகணும். **1 கொரி 9:24**ல பவுலும் இதான் சொல்றாரு,... நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்" 26ல "ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்." இலக்குனு ஒன்னு இருந்தா அதற்கான ஓட்டம் என்பதும் இருக்கு.வட்டத்துக்கும் இலக்கை அடைவதற்கும் உள்ள சில சம்பந்தங்ககளை உங்களுக்கு சொல்றேன்,பழைய ஏற்பாட்டிற்கும் நோனி புதிய ஏற்பாட்டிற்கும் இடையே உள்ள வருடங்கள் "இருண்ட காலம்" எனப்படுகிறது. அந்நாட்களில் தேவனை தொழுதுகொள்கிறதும் தேவ சத்தத்தை கேட்டு அதை பின்பற்றுவதும் காணப்படல. அப்போ நோனி என்ற தேவபயமுள்ள மனிதன், தேசத்தில் வறட்சி நீங்க பெருமழை வேண்டும் என்று வைராக்கியமாக ஆண்டவர்கிட்ட ஜெபம் பண்ணாராம். தன்னிடம் உள்ள 6அடி கோலை எடுத்து தன்னை சுற்றிலும் ஒரு வட்டமாக வரைந்து ஆண்டவர் மழையை பொழிய பண்ணும் வரை வட்டத்திற்குள்ளேயே இருப்பேன் என்று அப்பட்டணத்தின் ஜனங்கள் தன்னை இகழ்ந்த போதும் உறுதியாக நின்றபோது வானம் திறக்கப்பட்டு மழை பொழிந்தது. யோசுவா 6:3-6ல் ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களை பட்டணத்தை 7 முறை சுற்றிவர கட்டளையிட்டார் அப்படி அவர்கள் 7 நாட்கள் செய்து, 7வது நாளில் 7 முறை சுற்றினபோது எரிகோ மதில் கீழே விழுந்தது. இன்னும் ஒரு சுவாரஸ்யமான விஷயம் என்னனா என்னோட டாடி சில வருடங்களுக்கு முன்பு ஊழியத்தின் நிமித்தம் ஏற்பட்ட கடன்களால் ரொம்ப வேதனையில் இருந்தார். அப்போ ஆண்டவர் சொன்னது "**உனக்கு இருக்க எல்லா கடன்கள், லோங்களா முழவதும் ஒரு வட்டத்திற்குள்ள எழுதி** ஜெபினு" சொன்னாரு. உடனே அவர் அதே போல செஞ்சாரு...சொன்ன நம்பமாஉங்க சில வருடங்களுக்குள்ளயே எல்லா லோனையும் **Prepay** பண்ண கர்த்தா கிருபை செய்தார்.. இந்த மாதிரி இலக்குகளை அடைய நாம **focus** பண்ணி ஜெபம் பண்ணும்போது ஆண்டவர் அதை அடையச்செய்கிறதை நாம பார்க்கமுடியும். இந்த வருஷம் உங்க ஜெபங்கள், முயற்சிகள் என எல்லாமே இலக்கை நோக்கி இருக்கட்டும். சரி இப்போ என்னென்ன இலக்குகள் இருக்கு அதை எப்படி அடையலாம் என்பதைப் குறித்து பார்ப்போம்.



## Personal Goals

## 1 தனிப்பட்ட இலக்குகள்

ஐந்து வகையான இலக்குளை குறித்து நான் உங்கக்கூட பேச போறேன். முதலாவது மற்றும் மிக முக்கியமானது தனிப்பட்ட இலக்குகள். ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில இலக்குகளளோட செயல்படணும். உதாரணத்திற்கு 10,11,12 தேர்வு எழுதுகிற மாணவர்கள் சிறந்த மதிப்பெண்களைப் பெற்று, நல்ல கல்லூரியில் இடம் பெற வேண்டும் என்பதில் தொடங்கி புதிய வேலை, புதிய சிந்தனைகள், புதிய காரியங்களை கற்றுக்கொள்ளுதல், உடல் எடை குறைக்கணும் என்பது வரை நிறைய இலக்குகள் இருக்குங்க. ரொம்ப நாள் ஓட்டுன ஒரு பைக்கை மாற்றி புதிய பைக் வாங்கணும் என்பதும் ஒரு தனிப்பட்ட இலக்குதான். எதிர்காலத்திற்கு தேவையான பொருளாதாரத்தை சேமித்து வைப்பதில் ஒரு புதிய உச்சம் தொடுவதும் ஒரு இலக்குதான். சில பழக்கவழக்கங்களை விட்டு நல்ல பழக்கத்தை துவங்குவதும் ஒரு இலக்குதான். உங்களுடைய தனிப்பட்ட இலக்குகள் என்ன? இப்பவே அது என்னனு டைரில எழுதி வைங்க. இலக்குகளை அடைய முயற்சி பண்ணுங்க.

## Spiritual

## ஆவிக்குரிய இலக்குகள் 2

தேவனுக்குரிய காரியங்கள் அனைத்துமே ஆவிக்குரிய இலக்குகள்தான். தனிப்பட்ட ஜபம், வேத வாசிப்புல இருந்து ஆரம்பிச்சு, உபவாச ஜெபம், பல தரப்பட்ட ஊழியங்களைச் செய்தல், சபையின் ஊழியங்களில் ஈடுபாடு, கர்த்தருக்கு கொடுக்கிற காரியத்தில் வளர்ச்சி, ஊழியங்களில் இதுவரை இல்லாத அளவு வளர்ச்சி பெற்று தேவனுடைய ராஜ்ஜியத்தைக்கட்டுவது, ஆவிக்குரிய இலக்குகள். நிறைய பேருக்கு தனிப்பட்ட வாழ்க்கையில் வெற்றி பெறாததற்கு காரணம் தங்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் தோல்வியைத் தழுவினதினால்தான். ஆவிக்குரிய இலக்குகளை நாம் அடையும்போது அவை நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆவிக்குரிய வாழ்க்கையில் இன்னும் என்னவெல்லாம் சாதிக்கணும்னு நினைக்கிறீங்களோ, ஆவிக்குரிய வாழ்வில் எழுச்சி பெற உங்களோட இலக்குகளை இப்பவே எழுத ஆரம்பிங்க.

## Relationship Goals

## 3 உறவுகளின் இலக்குகள்

இதுகூட ஒரு இலக்கா என்று சில பேர் யோசிக்கலாம். ஆனால் இந்த இலக்குகளை சிலர் அடையாமறற்போனதுனால சோர்ந்துபோய் பல உறவு முறிவுகளை சந்திச்சு வாழ்க்கையே இழந்து போயிருக்காங்க. வேலை வேலைனு வேலையையே கதின்னு இருக்கிற தம்பதிகள் பொருளாதாரத்தைக் கட்டினாங்களேத் தவிர குடும்பத்தைக் கட்ட தவறிட்டாங்க. வேல பார்க்க யோசிக்காதவங்க பிள்ளைகளோட அ என்னனு கூட பாக்க யோசிக்கல. பிள்ளைகளோட சரியான நேரத்தை செலவிடாததுனால அவங்க வழி தவறிபோகிற சூழ்நிலைகளும் காணப்படுது. வெளியூரில் தங்கிவேலைப்பார்க்கிற நிறைய வாலிபபிள்ளைங்க அம்மா அப்பா கிட்ட பேசுறதே இல்லை. வாரத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு வாரத்திற்கு ஒரு முறைதான் பேசுறாங்க. அநேகர் அவர்களாகவே போன் போடுவதுகிடையாது. அம்மா அப்பா போன்பண்ணி பேசுனாதான் பேசுறாங்க. அந்த அளவுக்கு அவுங்க உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்குறாங்க. இந்த வருடம் நீங்க தினமும் உங்களச் சுற்றிலும் இருக்கிற உறவுகளுடன் **relationship**அ **maintain** பண்ணுங்க. வாரம் ஒரு முறை சொந்தகாரங்களுக்கு போன்போட்டு பேசுங்க. விசாரிங்க, அவர்களுக்காக ஜெபிங்க. மாதம் ஒருமுறை **conference call**ல சேர்ந்து ஜெபிங்க. கர்த்தர் உங்களையும் உங்க உறவுகளையும் ஆசீர்வதிப்பாரு.

## Social

## சமுதாய இலக்குகள் 4

சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள்னு சில காரியங்கள் இருக்குங்க. அதையெல்லாம் இலக்குகளாக வச்சி அடைய தீர்மானிப்போம். முக்கியமாக அரசாங்கத்தோட அறிவுரைகளை கேட்டு நடந்து விதிகளை பின்பற்றுவதுகூட சமுதாய இலக்குகள்தான். நாம ஒவ்வொருவரும் தனிமனிதர்களாயிருந்தாலும் சமுதாயத்துடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்கிறோம். அப்போ சமுதாயத்தில் நம்முடைய கடமையாக மற்றவர்களுக்கு உதவி செய்வது, மிகவும் ஏழை எளியவர்களுக்கு உங்களால் முடிந்த பண உதவிகளை செய்வது போன்ற காரியங்களை இலக்குகளாக வைத்து செயல்படுங்க. எல்லாவற்றிற்கும் மேலாக தினமும் உங்கள் மாவட்டத்திற்காக, நீங்கள் வசிக்கிற பகுதிக்காக ஜெபிக்கணும். சமுதாயத்தில் உங்களைப் பாதித்த நிகழ்வுகள், சமுதாய அவலங்களுக்காக ஜெபித்து, சமுதாயத்தில் உள்ளவர்களுக்காக உத்தரவாதம் எடுத்து ஜெபிங்க. கர்த்தர் உங்கள் ஜெபத்தைக்கேட்டு நிச்சயமாய் சமுதாயத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவார்.

## Professional Goals

## 5 வேலையில் இலக்குகள்

உங்களுடைய பணியில் சிறந்து விளங்கும் வருடமாக அமையட்டும். ஒரு வேளை கடந்த வருஷம் உங்க வேலையில ஒரு முன்னேற்றம், உயர்வை காணாம இருக்கலாம். சாதிக்க முடியாத சூழல் இருந்திருக்கலாம். வேலையில்லாதவர்கள் வேலையைத் தேடிக்கொண்டிருக்கலாம். அவையெல்லாமே இலக்குகளாக வைத்து இந்த வருஷம் நிறைவேற்ற பிரயாசப்படுங்க. இந்த வருடம் கடுமையாக உழைத்து சிறந்து விளங்குகிற வருடமாக மாறட்டும். உங்க கம்பெனியின் சிறந்த பணியாளர் விருதை நீங்கதான் வாங்கணும். அது எப்போ நடக்கும்னா நீங்கள உங்க வேலைலயில இலக்குகளை வைக்கும்போதுதான். எனவே இப்பவே உங்க வேலையில என்ன சாதிக்க போறீங்கன்னு எழுதுங்க.என்ன நண்பர்களே! எல்லாரும் எழுதி இருப்பீங்கன்னு நினைக்கிறேன். அதுமேல உங்க கைகளை வைத்து ஜெபம் பண்ணுங்க. முழுமையாக ஆண்டவரிடத்தில அர்ப்பணியுங்க. வாழ்வின் எல்லா பகுதிகளிலும் ஒரு **Target** வைச்சி செயல் படுகிறவங்களாக நீங்க மாறுங்க. எந்த ஒரு காரியத்தையும் அசதியா செய்யாம கடினமா உழைங்க. நம்ம இயேசப்பா உங்களுக்குத் தேவையான பெலனையும் கிருபையும் தந்து வழிநடத்துவார். நீங்க இலக்குகளை அடைய ஆரம்பித்தாலே உதவி செய்கிற தேவனுடைய கரம் உங்கக்கூட இருந்து வழிநடத்தும். நீங்கள் உங்க இலக்குகளை அடைய என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# PASSOVER

# பஸ்கா பண்டிகை



PAS. JOY HANNAH ALWIN



**ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சிறப்பு செய்தி வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் அநேக கிறிஸ்தவர்கள் லெந்து நாட்களை அநுசரிப்பார்கள். கிறிஸ்துவின் பாடுகளையும், கல்வாரியையும் தியானிக்கக்கூடிய இந்த மாதத்திலே இஸ்ரவேலர்களின் மிக முக்கியமான பண்டிகையான பஸ்கா பண்டிகையை எதற்காக கொண்டாடுகிறார்கள் என்பதையும், இந்த பண்டிகைக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள தொடர்பைப்பற்றியும் தியானிப்போம்.**

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 1300 வருடங்களுக்கு முன்பாக இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தனர். அவர்களுடைய கூக்குரல் தேவனுடைய சமூகத்தை எட்டியதால், தேவன் தம்முடைய ஜனங்களை விடுவிக்கும்படி மோசேயையும் ஆரோனையும் எகிப்தின் மன்னனாகிய பார்வோனிடத்திற்கு அனுப்பினார். ஆனால் பார்வோன் அவர்களை விடுதலை செய்ய மறுக்கவே, தேவன் எகிப்து தேசத்தை பத்து கொடிய வாதைகளால் வாதித்தார். பத்தாம் வாதையைக் கொண்டு வந்தபோது எகிப்தின் முதற்பேறனைத்தும் செத்துமடிந்தன. அதற்குப் பிறகே அவர்களை விடுதலை செய்தான்.

இந்த பத்தாவது வாதைக்கு முன்பாக இஸ்ரவேல் ஜனங்களை பஸ்காவை ஆசரிக்கும்படி தேவன் அவர்களுக்கு கட்டளையிட்டார். இதை நாம் யாத்திராகமம் 12ம் அதிகாரத்தில் வாசிக்க முடியும்.







## பஸ்கா என்றால் என்ன?

கி.மு. 1513ஆம் ஆண்டு, ஆபிப் என்றழைக்கப்பட்ட எபிரெய மாதத்தின் 14 ஆம் தேதி பஸ்கா பலிக்கு, 10ஆம் தேதியிலிருந்தே அவர்கள் தயாராக வேண்டும். அதாவது பஸ்கா பலியிடுவதற்கு தேவையான ஆட்டுக்குட்டி, நான்கு நாட்களுக்கு முன்பாக தெரிந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பலியாகப்போகும் இந்த ஆடானது அவர்களுடைய வீடுகளில் நான்கு நாட்கள் கட்டி வைக்கப்பட்டிருக்கும். இந்த நான்கு நாட்களில் அந்த வீட்டில் உள்ளவர்கள் பலி ஆட்டுடன் பழகினாலும் அவர்களால் நான்காம் நாள் அந்த ஆடு பலியிடப்படும்.

கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம் போலவும் இருக்கிறது 2 பேதுரு 3:8ல் வாசிகின்றோம். மேலும் மோசேயின் ஜெபத்தில், தேவனுடைய பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது (சங்கீதம் 90:4) என்று கூறுகிறார். கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம்வருஷம் போல இருந்தால், நிசான் மாதம் 10ம் தேதி முதல் 14ம் தேதி வரையான நான்கு நாட்கள், நாலாயிரம் வருஷத்தை குறிகின்றது. இந்த நான்கு நாட்கள் ஆதாம் முதல் இயேசுவின் பிறப்பு வரையிலான நாலாயிரம் வருடங்களை அது குறிகின்றது.

தேவன் தரும் சுதந்தர நாட்டுக்கு பயணம் செய்யப்போகிறோம், இந்த எகிப்து இனி எங்களுக்குச் சொந்தமல்ல என்பதை அவர்கள் ஆட்டுக்குட்டியைப் புசித்த முறை சுட்டிக்காண்பிக்கிறது. புளிப்பில்லாத அப்பம் பிரித்தெடுக்கப்பட்ட தூய வாழ்க்கையையும், கசப்பான கீரையானது பாவத்தினால் நாம் அடைந்த அடிமைத்தனத்தின் கசப்பையும் பிரதிபலிக்கிறது. நாம் பழைய வாழ்க்கைக்குத் திரும்பச் செல்லாதபடியும் புதிய வாழ்க்கையில் நம்மை மீட்ட கிறிஸ்துவின் மரணத்தின் நினைவுகளுடன் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம்



இஸ்ரவேலர்களுக்கு ஒருநாள் என்பது, ஒரு சூரிய மறைவில் துவங்கி அடுத்த நாள் சூரிய மறைவில் முடியும். நிசான் 14ஆம் தேதியன்று, இஸ்ரவேல் வீட்டுத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒரு செம்மறியாட்டுக்கடாவை (அல் லது வெள்ளாட்டுக்கடா) அடித்து, அதன் இரத்தத்தில் கொஞ்சத்தை

வீட்டுவாசலின் நிலைக்கால்களிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்தார்கள். (யாத். 12:37, 22, 23) நெருப்பினால் சுடப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை, கசப்பான கீரையோடும் புளிப்பில்லாத அப்பத்தோடும் சாப்பிட்டார்கள். அந்த ராத்திரியிலே, யாருடைய வீட்டின் நிலைக்கால்களில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்படாமல் இருந்ததோ அந்த வீட்டின் முதற்பேறனைத்தும் கொல்லப்பட்டது. எகிப்தியரின் வீட்டில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் பூசப்படாமலிருந்ததால் கர்த்தருடைய தூதன் கர்த்தருடைய தூதன் அனைத்து தலைப்பிள்ளைகளையும் கொன்றுபோட்டான். ஆனால் பஸ்காவை ஆசரித்து தேவனுக்கு கீழ்ப்படிந்த இஸ்ரவேலர்களின் வீட்டில் அழிக்கும் வாதை வரவில்லை. ஒருவர் கூட சாகவில்லை. ஆகவே அந்த நாளை இஸ்ரவேலர்கள் பஸ்கா பண்டிகையாக யூதர்கள் இதை ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருகின்றார்கள்.

## பஸ்காவாகிய கிறிஸ்து



**நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே** (1 கொரிந்தியர் 5:7)

பஸ்கா பண்டிகையானது, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மட்டுமே நாம் மீட்கப்பட முடியும் என்பதைக் குறிக்கிறது. பூட்டிய வீட்டுக்குள் அடிக்கப்படுகிற ஓர் ஆட்டுக்குட்டியின் மரணம் ஒரு நாட்டின் விடுதலைக்கான கதவைத் திறந்துவிடுகிறது. பிறந்து ஓராண்டு நிறைவுற்ற இளம் ஆட்டுக்குட்டியின் மரணம் நானூறு ஆண்டுகால அடிமை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. ஓர் எளிய ஆட்டுக்குட்டியின் முடிவு இஸ்ரவேலர்களுக்கு ஒரு புதிய தொடக்கத்தைக் கொடுக்கிறது. ஒரு புதிய ஆண்டில், ஒரு புதிய நாட்டுக்கு, ஒரு புதிய புனிதப் பயணத்தை ஆரம்பிக்கவைக்கிறது. நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டதன் வாயிலாக நாமும் இத்தகைய ஒரு புதிய தொடக்கத்தைப் பெற்றிருக்கிறோம்.

கி.பி. 33ல், பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்ட அதே நாளில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டார். யாத்திராகமம் 12:46 மற்றும் எண்ணாகமம் 9:11,12 ஆகிய வசனங்களின்படி பஸ்காவின்போது அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் எலும்பை இஸ்ரவேலர்கள் முறிக்கக்கூடாது. அப்படியென்றால், உலகத்தின் பாவத்தைப் போக்குவதற்கு தேவனால் அனுப்பப்பட்ட ஆட்டுக்குட்டியை பற்றி என்ன சொல்லலாம்? இரு குற்றவாளிகளுக்கு இடையே இயேசு அறையப்பட்டார். சிலுவையில் ஏற்றப்பட்டவர்கள் சீக்கிரத்தில் இறந்து விடுவதற்காக அவர்களுடைய கால்களை முறித்துவிடுமாறு பிலாத்துவிடம் யூதர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

ஏனென்றால், அடுத்த நாளாகிய நிசான் 15ம் தேதி பெரிய ஓய்வு நாளாக இருந்தது. ஓய்வுநாளன்று சடலங்களைக் சிலுவை மரத்தில் அப்படியே விட்டுவிடக்கூடாது. அதனால், வீரர்கள் இரு குற்றவாளிகளின் கால்களையும் முறித்தார்கள்; இயேசுவிடம் வந்தபோதோ, அவர் ஏற்கெனவே இறந்திருந்ததைக் கண்டு அவரது கா ல்களை முறிக்காமல் விட்டுவிட்டார்கள். (யோவான் 19:31-34) பஸ்கா ஆட்டுக்குட்டியின் எலும்புகள் முறிக்கப்படாதது, கி.பி. 33, நிசான் 14 அன்று நடக்கவிருந்த சம்பவத்துக்கு நிழலாய் இருந்தது.

அதுமட்டுமல்லாமல், இவையெல்லாம், சங்கீதம் 34:20ல் உள்ள வார்த்தைகளுக்கு இசைவாகவே நடந்தன. தீர்க்கதரிசனங்களின் மீதான நம்முடைய நம்பிக்கையை இது பலப்படுத்துகிறது. சிலுவையில் நமக்காய் ஜீவன் தந்த இயேசு, சாவை வென்று சொன்னபடியே மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். இஸ்ரவேல் மக்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டதுபோல நீங்களும் நானும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் வரப்போகின்ற அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளோம்.

தேவன் தம்முடைய மக்களைக் காப்பாற்ற வல்லவர் என்ற விஷயத்தை மட்டுமல்ல, அவர் விடுவிப்பவர் என்ற மாபெரும் உண்மையை பஸ்கா பண்டிகை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி விடுவித்தார். மேகஸ்தம்பத்தாலும் அக்கினிஸ்தம்பத்தாலும் அவர்களை வழிநடத்தினார். சமுத்திரத்தின் தண்ணீர் வலதுபுறமாகவும் இடதுபுறமாகவும் மதிலாக நிற்க, அதன் நடுவே வெட்டாந்தரையில் அவர்கள் நடந்துபோனார்கள். பத்திரமாக அக்கரையை அடைந்தபின், தண்ணீர் திரும்பிவந்து பார்வோனுடைய ராணுவம் அனைத்தையும் மூடிக்கொண்டதை அவர்கள் கண்டார்கள். ஒரு ஆட்டுக் குட்டியின் இரத்தம், பேரழிவிலிருந்து இஸ்ரவேல் மக்களை காப்பாற்றினதுபோல, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் வரப் போகின்ற உலகப் பேரழிவிலிருந்து நம்மை காப்பாற்ற போதுமானதாக உள்ளது.

ஒருவேளை நீங்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படாத நிலையில் இருக்கிறீர்களா?. வேதாகமம் சொல் கின்றது, குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா யிருக்கிறார் (1 யோவான் 1:7-9)

ஆகவே உடனடியாக, இயேசுவே நீர் என்னுடைய பாவங்களுக்காகவும் சிலுவையில் இரத்தம் சிந்தினீர் என்பதை நம்புகின்றேன். உம்முடைய இரத்தத்தால் என்னுடையை பாவங்களை அகற்றிவிடும். உமக்காய் பரிசுத்தம்மாய் வாழ என்னை அர்ப்பணிக்கின்றேன் என்று சொல்லி உங்களுக்காக இயேசு வைத்திருக்கும் பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ளுங்கள்.

# நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாக நடைபெற்ற சமுதாய பணிகள்:

Regd No: 203/2013 A Registered Charitable Trust




அன்பானவர்களே, தேவனுடைய பெரிதான கிருபையினால், கிறிஸ்துபிறப்பின் சந்தோஷத்தை நெசா தொண்டு நிறுவனம் மூலமாக ஏழை எளிய ஜனங்களோடு பகிர்ந்துகொண்டோம். கடந்த டிசம்பர் மாதம் மிக்ஜாம் புயலால், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை பட்டணத்தின் முக்கிய இடங்களான பள்ளிகரணை, வேளச்சேரி, கோடம்பாக்கம், அசோக்நகர், சேலையூர், தாம்பரம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று, உணவு, உடைகள், அத்திவாசிய பொருட்களை வழங்கினோம், மேலும் வருடந்தோறும் செய்துவருகிறபடி டிசம்பர் 17ம்தேதி ஆதவரவற்ற இல்லங்களிலுள்ள முதியவர்கள் (சகாயம் இல்லம்), மாற்றுதிறனாளிகள், பார்வையற்றோர் (அன்னை பார்வையற்றோர் இல்லம்) நெசா தொண்டு நிறுவனம் மூலமாக நடத்தப்படும் இலவச மாலை பள்ளி சிறார்கள் மற்றும் கைம்பெண்கள் ஆகிய 450 பேருக்கு புத்தாடைகள், பரிசுபொருட்கள் மற்றும் அறுசுவை உணவு அளிக்கப்பட்டது.

உன்னதமான இந்த நலத்திட்டபணிகள் அனைத்தும் உங்களது உதாரத்துவமான நன்கொடையினாலும், பாரமுள்ள ஜெபத்தினாலும் மட்டுமே சாத்தியமாகிறது. இதற்குக்காரணமாக இருக்கிற உங்களை தேவனாகிய கர்த்தர் நினைத்தருளி, ஆயிரம் மடங்கு ஆசீர்வதிப்பாராக!

தொடர்ந்து, இப்படிப்பட்ட நலத்திட்டப் பணிகளுக்கு நீங்கள் உதவ விரும்பினால் அல்லது தன்னார்வராக பணியாற்ற 9884901777 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள்.

உங்களுடைய பிறந்தநாள் திருமண நாட்கள் மற்றும் விசேஷ நாட்களில் நெசாவோடு இணைந்து நீங்களும் நெசாவோடு சமுதாயப்பணிகளை மேற்கொள்ள அன்புடன் அழைக்கிறோம். நெசா தொண்டு நிறுவனத்திற்கு உங்களுடைய நன்கொடைகளை அனுப்பும்போது அதற்கு வரிவிலக்கு உண்டு. உங்களுடைய உதவிக்கரத்தை ஏழை எளியவர்களுக்காக நீட்டுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

| | | |
|---|---|---|
| Account Name | : | Nessa Trust |
| Banker's Name | : | HDFC Bank |
| Account No | : | 50200002673830 |
| Branch | : | Kodambakkam |
| IFSC Code | : | HDFC0000574 |

www.nessatrust.org UPI VISA RuPay PCI compliant

# எழுப்புதலுக்காய் 24/7 ஜெப மையத்தை எழுந்து கட்டுவோம் வாருங்கள்





தேவனுடைய பிள்ளைகளே, இது கடைசி காலம்! எழுப்புதலின் நேரம்!! ஆண்டவர் சபைகளையெல்லாம் மாபெரும் எழுப்புதலின் அறுவடைக்கு ஆயத்தமாகிக்கொண்டு வருகிறார். ப்ரீடம் பெருவிழாக் கள் மூலமாக ஏராளமான வாலிபர்களை ஆண்டவருடைய ஊழி யத்தை செய்வதற்காக எழுப்புவது, போதகர்கள் மிஷனெரிகளை யோசுவாவின் சேனை என்ற கருத்தரங்கு மூலமாக உருவாக்குவது, அற்புத பெருவிழாக்கள், பத்திரிக்கை ஊழியம், தொலைக்காட்சி ஊழியம், எக்காள பண்டிகை, ஒவ்வொரு மாநிலத்திற்கும் பட்டணத் திற்கும் சென்று, ஜனங்களுக்காக திறப்பில் நின்று, தேவனுடைய ராஜ்யம் வருவதாக என்று பிரகடனப்படுத்தி ஜெபித்திருக்கிறோம். இப்பொழுதும் ரூஹா ஊழியத்தின் மூலமாக தேவன் செய்யப்போகிற காரியங்களுக்கு கீழ்படிந்து எழுப்புதல் மையத்தைக் கட்டும்படி ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம்.

24 மணி நேரமும் துதித்து, ஜெபித்து, திறப்பிலே நின்று, "ஆண்டவரே! எங்கள் தேசத்தை சந்தியும்" என்று எலியாவைப் போல முழக்கமிட ஒரு கர்மேல் பர்வதம் நமக்குத் தேவை. அக்கினி மயமான நாவுகள் இறங்கி வந்த மேல்வீட்டறை தேவை. நாம் வாங்கப்போகிற ரூஹா எழுப்புதல் மையமானது, பல தேசங்களி லிருந்து வருகிற இளம் வாலிபர்களை வார்த்தையிலும் மீடியாவிலும் ஆராதனையிலும் கூர்மையான ஆயுதங்களாக உருவாக்கும் ஒரு எழுப்புதல் பட்டறையாக இருக்கும்.

அப்படிப்பட்ட ஒரு இடத்தை ஆயத்தம்பண்ணும்படியாக தேவன் நமக்கு ஒரு இடத்தைக் காண்பித்திருக்கிறார். 16 ஆண்டுகளுக்கு பிறகு தாவீதின் நகரமாக, சீயோன் கோட்டையாக தேவன் தரப் போகிறார். எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று நெகேமியா அறைகூவல் விடுத்தபோது, ஜனங்கள் எழும்பி வந்து அலங் கத்தைக் கட்டினது போல, நீங்களும் எங்களோடு கூட இணைந்து கடைசி எழுப்புதலுக்காக, தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்ட எங்களோடு இணையும்படி அன்பாய் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுக்காக வைராக்கியமாய் நிற்கும்போது, தேவன் உங்களை யும் உங்கள் வீட்டையும் கட்டுவார். பரலோகத்தின் தேவனானவர் உங்களுக்கு காரியத்தைக் கைக்கூடி வரப்பண்ணுவார். ஆகவே வாருங்கள் எழுந்து கட்டுவோம். உங்கள் மனதிலே ஆண்டவர் இந்த எழுப்புதல் மையத்திற்காக என்ன விதைக்கச் சொல்லுகிறாரோ அதை விதையுங்கள். தேவனுடைய ராஜ்யத்திற்க்கென்று உற்சாகமாய் விதையுங்கள்.

ஒரு சதுர அடியின் விலை ரூபாய் 2500 என்று கணக்கிடப் பட்டுள்ளது. நீங்கள் குடும்பமாகவோ, சபையாகவோ அல்லது ஜெபக்குழுவாகவோ சேர்ந்து எழுப்புதலுக்காக விதைக்கலாம்.

எழுப்புதலுக்காக எனது பங்கு

- ☐ ஒரு சதுர அடி ரூ.2500
- ☐ 4 சதுர அடி ரூ 10000
- ☐ 10 சதுர அடி ரூ 25000
- ☐ எனது பங்கு ரூ____________

பொருத்தனையோடு விதையுங்கள். ஆண்டவருடைய ஆலயத்தைக் கட்ட வேண்டுமென்று தாவீது விரும்பினபோது, தேவன் தாவீது ஒரு நிலையான வீட்டைக் கட்டினார். அவனுடைய ராஜ்யபாரத்தை ஸ்திரப் படுத்தினார். அதுபோல எழுப்புதலுக்காக வைராக்கியம் பாராட்டி, பொருத் தனை செய்து விதைக்கிற உங்களையும் கர்த்தர் நிச்சயம் ஆசீர்வதிப்பார்.

உங்களுடைய உதாரத்துவமான காணிக்கைளை Cheque / DD/ Money Order மூலமாக அனுப்ப விரும்பினால் Ruah Ministries Buliding Fund என்ற பெயரில் அனுப்பலாம். அல்லது கீழே உள்ள QR Code ஐ பயன்படுத்தி Googlepay / Phonepe மூலமாக அனுப்பலாம். உங்கள் விதைகளை நீங்கள் அனுப்பிய பிறகு 9884901777 என்ற எண்ணிற்கு வாட்சப் மூலமாகவோ அல்லது தொலைப்பேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு கட்டாயம் தெரிவிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**1 Account Details** வங்கிக்கணக்கு

| | | |
|---|---|---|
| ACC. NAME | RUAH MINISTRIES | RUAH MINISTRIES BUILDING FUND |
| ACC. NUMBER | 05741450000037 | 50200033712782 |
| BANK NAME | HDFC Bank | HDFC BANK |
| BRANCH NAME | Kodambakam | Kodambakkam |
| IFSC CODE | HDFC0000574 | HDFC0000574 |

**2** Google Pay / Phone Pe

**9444150777**

**3 Cheque Favour Name:**

- Ruah Ministies
- Ruah Ministries Building Fund

*Scan here to Donate*

**4 E.M.O** மணி ஆர்டர்

To Address: Ps. Alwin Thomas
82, Jawaharlal Nehru Salai,
Vadapalani, Chennai - 26, 9884710777

நீங்கள் பணம் செலுத்தியபின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் எந்த ஊழியத்திற்காக நீங்கள் காணிக்கை அனுப்பியிருக்கிறீர்கள் என்ற விவரங்களை **9884901777** என்ற எண்ணிற்கு வாட்சப் மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

**Owned and Published by E.Alwin Thomas No.5, 18th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Printed by T. Simon Peter Vasanth Prints & Packs, No.44, Paarthasaarathi pettai Street, Vellala Teynampet, Chennai - 600 086. Editor E. Alwin Thomas**

Registered Newspaper RNI No. TNTAM/2010/36309 | Postel Regd.No. TN/CC(S)DN/411/23-25
Licensed to Post WPP No.TN/PMG(CCR)WPP-585 / 2023-2025 Published on 1st week of Every Month
Posted between 25-31 Jan 2024 | Posted at RMS Egmore Patrica Channel

# RUAH INTERNATIONAL BIBLE COLLEGE

BREATH OF GOD... BUILDING LIVES...




THE VISION OF **RIBC** IS TO **RAISE A GENERATION** OF LEADERS **TRANSFORMING** THE NATIONS THROUGH **THE WORD OF GOD!** FROM AN **ORDINARY PEOPLE EXTRAODRINARY WORKS!**

**ONLY LIMITED SEATS AVAILABLE**

## COURSES OFFERED

- **MANTLE**
  6 Months (Intensive Ministry Course)
- **Diploma in Theology**
  SSLC, 2 Years (ATA)
- **Bachelor in Theology**
  +2 and above, 3 Years (ATA)
- **M.Div** (ATA)
  Any Degree/B.Th. (English)
  2/3 Years

Scan here to Download Admission Form

## ADMISSION OPEN FOR 2024–2025

- CHRIST *CENTERED*
- *CHARACTER* FORMATION
- ACADEMIC EXCELLENCE
- MINISTRY *EMPHASIS*
- *CHURCH* PLANTING
- MEDIA EXPOSURE

9884901777 / 9884710777

www.ruahschool.com

*If Undelivered please Return to:*

**RUAH SUVASA KATRU**
No. 82, 100 Feet Road,
Vadapalani, Chennai,
Tamil Nadu 600026

To